முரசொலி
வார இதழ்.
ஆசிரியர் மு. கருணாநிதி.

முரசு 2 | சென்னை | 5—8—55 | வெள்ளி | ஒலி 19

# பத்து நாள் பரபரப்பு

## மு. கருணாநிதி

ஆனந்

"மக்களின் கவனத்தைக் கவரும் பரபரப்பான செய்திகளுக்கு காரணமாக இருக்கக் கூடியவர்கள் யார்? புரட்சித் தந்தைகள், புதுமைச் சிற்பிகள், கர்மவீரர்கள் முதலியவர்கள்தான் காரணமாக இருக்க முடியும் என்கிறேன் நான்! இதற்கு உங்கள் பதில் என்ன?" என்று ஒரு கேள்வியை விடுத்திருக்கிறார் நெருங்கிய நண்பர் ஒருவர். நண்பரின் கருத்து மறுக்க முடியாததுதான் என்றாலும், முழுவதும் ஒப்புக் கொள்ள முடியாதது என்பதையும் அவருக்கு விளக்க வேண்டிய கட்டத்திலேயிருக்கிறேன். பரபரப்புக்குக் காரணமாக இருக்கக் கூடியவர்கள் இருவகை. அதிலே ஒருவகைதான் நண்பர் கூறும், காம வீரர்கள்! இதோ மற்றொரு வகையிருக்கிறது; நண்பரும் நாட்டோரும் காண வேண்டிய "பரபரப்பாளர் பட்டியல்!"

குடகுச் சீமையிலே ஒரு குமரியிருக்கிறாள். தனலட்சுமி அவள் பெயர். அன்னமே தேவையில்லையெனும் நங்கை மடவன்னம் அவள்!

செய்திகள் பறந்தன. குடகுக் குமரியின் குடல் பற்றிய நுணுக்கம் மிகுந்த ஆராய்ச்சிகள் குவிந்தன. இப்படிச் சில நாள்! பின்னர் ஒருநாள்; பசியாவரம் பெற்றப் பாவை உண்ணுதிருப்பதில்லையென்ற தகவல் ஊராருக்குத் தெரிவிக்கப் பட்டது. பரபரப்பு அடங்கியது. தனலட்சுமியின் தரிசனங் காணப் புறப்பட்ட யாத்ரீகர்களின் தொகையும் குறைந்தது.

நேபாள பாபா என்றொரு சிறுவன். தீராத வியாதியெல்லாம் தீர்த்துவைக்கும் தெய்வப் பிறவி — ஏடுகள் பேசின இப்படி! மக்கள் கடலெனத் திரண்டனர்— "நேத்திரம் கண்ட சுகந்தான் என்ன! நேபாள பாபாவின் அருள்தான் என்ன!" என்று பரவசமுற்றனர் பாபாவை நேரில் கண்டவர்கள்! "பழனி ஆண்டவனைப் போலத்தானிருக்கிறான்; பால் வடியும் முகம் – என்ன அருள்! என்ன அருள்!!"—பக்தர் போற்றினர். பரபரப்பு! நாடெங்கும் பரபரப்பு! அவனைக் காண வரும் மக்களுக்கு பிரத்தியேகமான வாகன வசதிகள்–போக்குவரத்து வசதிகள்! திடீரென ஒருநாள், சர்க்கார் சட்டத்தை நீட்ட வேண்டிய நெருக்கடி பிறந்தது; நேபாள பாபா அடங்கினான்; பரபரப்பு அடங்கியது! பக்தர் படை ஊர் திரும்பியது, நோய்க்குப் பலியானது போக மிச்சம் மீதி!

கும்பமேளா, இந்திய உப கண்டத்திலேயே பெரிய விழா. லட்சோப லட்சம் மக்கள் கூடினர் என்றெல்லாம் செய்திகள். நேரு முதல் அனைவரும் வந்திருந்தார்கள். ஆயினும் கும்பமேளாவில் கதாநாயகர்களாகக் காட்சியளித்த பெருமை நாக சாதுக்களைத்தான் சேரும். அத்தகைய பரபரப்பான சம்பவத்திற்குக் காரணமாக இருந்தார்கள் அவர்கள். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்களை, குழந்தையென்றும், குமரியென்றும் பாராமல், ஈட்டி முனை கொண்டு குத்தியும், அரிவாளால் கொத்தியும் போட்டார்களே; அந்த சம்பவத்திற்குக் காரணமே, அந்த விழாவில் அவர்கள் மேற்கொண்ட பரபரப்பான காரியந்தான்! லட்சக் கணக்கான மக்கள்—அவர்கள் லட்சியமோ மோட்ச மார்க்கம்! தேவன் திருவடி!

ஆனால் அத்தகைய ஆண் பெண் இருபாலாரின் கவனத்தையும் கவரும் வகையில் நாக சாதுக்கள் நிர்வாணமாக ஆணும் பெண்ணும் அணிவகுத்து வருகிறார்கள் என்ற பரபரப்பான செய்தி கிளம்பிற்று! ஓடினர் பலர்–உயிர் விட்டனர் பலர்! பின்னர் பரபரப்பு அடங்கிற்று. கும்பமேளா என்றால் தீர்த்த மகிமையோ, தேவ கடாட்சமோ-நினைவுக்கு வரவில்லை. நாகசாதுக்கள்தான் ஞாபகத்தில் இருந்தார்கள்!

இதோ, அண்மையில் நடைபெற்ற மற்றொரு பரபரப்பான செய்தி.

உஜ்ஜெயின் மாவட்டத்திலேயிருந்து, ஜெண்ட் குன்வார் என்கின்ற ஒரு பெண் ஒரு விசித்திரமான செய்தியை வெளியிட்டாள்.

"வருகிற ஜூலை 29-ம் தேதி என்னுடைய கணவர் பாம்பு கடித்து இறந்து விடுவார். அவரோடு நானும் உடன்கட்டை ஏறப்போகிறேன்."

இதுதான் அவள் விடுத்த செய்தி. ஜூலை 14-ம் நாள் செய்தி வெளியானது. அவ்வளவுதான்; அந்த மாவட்டம் முழுதும் மக்களிடையே பெரும் பரபரப்பு எழுந்தது. உடன்கட்டை ஏறும காட்சியைக் காணுவதற்காக இரண்டு லட்சம் மக்களுக்கு மேல் துக்ரல் என்னும் கிராமத்திலே கூடிவிட்டார்கள். தனி ரயில்களும் விடப்பட்டன, மக்கள் சௌகரியத்திற்காக!

கட்டுக்கடங்காத அந்தக் கூட்டத்தைக் கலைப்பதற்காக போலீசார் முயற்சித்ததின் காரணமாக மூவர் கொல்லப் பட்டனர். பலர் காயமுற்றனர். உடன்கட்டை ஏறுவதாக செய்தி வெளியிட்ட அந்தப் பெண்ணையும், அவள் கணவனையும் போலீசார் இந்தூர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டனர். அது கண்ட இரண்டு நாக சன்யாசிகள், மக்களைக் கூட்டி வைத்து, போலீசார் மறைத்து வைத்திருக்கும் கணவன் மனைவி இருவரையும் விடுவித்து விட வேண்டுமென்றும், உடன்கட்டை ஏறும் நிகழ்ச்சி நடைபெற வேண்டுமென்றும், போலீசார் மறுத்தால் அவர்களைத் தாக்க வேண்டுமென்றும் தூண்டிவிட்டார்கள், மக்கள், அந்த சாதுக்களின் கட்டளைப்படி போலீசாரை எதிர்த்தனர். பின்னர் துப்பாக்கிப் பிரயோகம்—மூவர் பலி—பலர் காயமுற்றனர்!

துக்ரல் கிராமமே ரகளைப் பட்டுவிட்டது. நாட்டில் உள்ள ஏடுகள் அனைத்தும் இந்தச் செய்தியை பரபரப்போடு வெளியிட்டன. "யார் அந்தப் பெண்மணி? உடன்கட்டையேறும் உத்தமி, யார்? யார்?" என்று மக்கள் துடித்து நிற்கும்போது, அந்தப் பெண்ணிடமிருந்து தகவல் வந்து விட்டது; "உடன்கட்டை ஏறுவதை வாபஸ் பெற்று விட்டேன்" என்று!

ஜூலை 14 முதல் ஒரு பத்து நாட்கள் வரையில் அவளுடைய பெயர் பரபரப்போடு உச்சரிக்கப் பட்டதும், மூவர் பலியானதும்தான் மிச்சம்—அவளுக்கு அந்த விளம்பரம் போதும்; அதிலே அவளுக்கு ஒரு திருப்தி; பின் விளைவைப் பற்றிக் கவலையில்லை. "உடன்கட்டையேறுவதாகக் கூறி ஏமாற்றி விட்டாளே" என்று ஊரார் பேசுவார்கள்! பேசட்டுமே–அப்படிப் பேசும் போதெல்லாம் ஜெண்ட் குன்வார் என்கின்ற அவளது பெயரையும் உச்சரிப்பார்கள் அல்லவா? எவ்வளவு பெரிய விளம்பரம்—இவ்வளவு சுலபமாக யாரால் பெறமுடியும் இத்தகைய விளம்பரத்தை! மத்யபாரத சர்க்காரே அறிக்கை வெளியிட்டு அந்த மாதரசி உடன்கட்டை ஏற மாட்டாள் என்று மக்களுக்கு தெரியப்படுத்துகிறது என்றால், அது என்ன சாதாரண விளம்பரமா?

தவறு, பரபரப்பான செய்திகளை வெளியிடுகிறார்களே

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

Best copy available

# கொடி எரிப்புக் கிளர்ச்சி!

## ஜூலை 17-முதல் 30-ந் தேதி வரை!

### திருச்சி காட்டிய காரணங்கள்!

★ வடநாட்டு ஆட்சியையும், ஆதிக்கத்தையும், இந்தியைப் புகுத்தி தமிழ் நாட்டையும், அதன் கலாச்சாரத்தையும், தமிழ் மொழியையும் அழித்து, தமிழ்நாடு வடநாட்டுக்கு நிரந்தர அடிமை நாடாக இருக்க மத்திய அரசாங்கம் என்பதும், வடவர்களும் இந்நாட்டுப் பார்ப்பனர் பலரும் பலமான ஏற்பாடு செய்து வருவதாக இக்கூட்டம் உறுதியாக நம்புவதால், இதன் எதிர்ப்பைக் காட்டவும், இனி இந்நாட்டவர்கள் இந்தியப் பிரஜையாக இருப்பதற்கு தாங்கள் இஷ்டப்படவில்லை என்பதைக் காட்டவும், இந்திய அரசாங்கத்துக்கு உணர்த்தவும், இந்திய தேசியக் கொடி என்பதை ஆகஸ்ட் 1-ம் தேதியன்று தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு இந்தியப் பிரஜை என்பவரும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்பதாக இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

—திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் திருச்சி தீர்மானம் (17—7—55)

★

★'நான் குற்றவாளியல்ல'

—திராவிட நாட்டில் இந்தியை அரசியல் மொழியாகவோ, தேசிய மொழியாகவோ, உத்தியோக மொழியாகவோ யூனியன் சர்க்கார் புகுத்துவதையும், நடைமுறையில் கொண்டுவருவதையும் திராவிட (தமிழ்) மக்களாகிய நாங்கள் விரும்பவில்லை.

—கொடி எரிப்புக் கிளர்ச்சியில் கைதானால், நீதி மன்றத்தில் கூற வேண்டியது என்று தினந்தோறும் 'விடுதலை'யில் வெளிவந்த அறிவிப்பு.

★

### நோக்கம் தெளிவுபடுத்தப்படுகிறது!

★ இந்திய தேசியக் கொடியை கொளுத்துவது, இந்திய கூட்டு ஆட்சி என்பதில் தமிழ் நாட்டுத் தமிழர்களாகிய நாங்கள் பிரஜைகளாக இருக்க சம்மதப்படவில்லை என்கின்ற எங்களுடைய இஷ்டமின்மையைக் காட்டுவதாகும்.

—21—7—55 வெளியூர் 'விடுதலை'யில், பெரியார் அறிக்கை.

★

### இறுதிக் கிளர்ச்சி!

★★ காங்கிரஸ்காரரையும், பார்ப்பனர்களையும், மற்றுக் கட்சிக்காரர்களையும், மற்ற தமிழ் நாட்டை தாய்நாடாக—தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மக்களையும், செல்வர்களையும், புலவர்களையும், எங்களவர்கள் என்பதாகக் கொண்டே இக்கிளர்ச்சி துவக்கியிருக்கிறேன்... அநேகமாக என்னைப் பொறுத்த வரையில் இது இறுதிக் கிளர்ச்சியாகும்.

—22—7—55 வெளியூர் 'விடுதலை'யில், பெரியார் அறிக்கை.

★

### பெரியார் கேட்ட நிபந்தனை!

★★பெரியார் இக்கிளர்ச்சியைக் கைவிடவா? ஆம்; கைவிடலாம். ஆனால் எந்த நிபந்தனையின்மீது? சென்னை சர்க்கார் என்ன வாக்குறுதி கொடுத்தாலும் போதாது; ஏனெனில் இவர்களுக்கு இப்பிரச்சினையில் சிறு சக்தியும் கிடையாது. இருந்தால், இன்றைய நிலைமையே ஏற்பட்டிருக்காது. இந்தியை வெறுப்பதில் திராவிடக் கழகத்தாரைக் காட்டிலும் சென்னை ஆட்சியாளர் மிகுந்த தீவிரமாக இருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும்.

★

### சென்னை சர்க்காரிடமிருந்தல்ல; மத்திய சர்க்காரிடமிருந்து!

★★★ ஆதலால் மத்திய சர்க்கார் அதிகாரப் பூர்வமான அறிக்கை வெளியிட வேண்டும். இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத சென்னை ராஜ்யத்தில் இந்தி எந்தத் துறையிலும் கட்டாயமாக்கப்பட மாட்டாது என்று டில்லி ஆட்சியின் அறிக்கை, அடுத்த ஒரு வாரத்துக்குள் வரவேண்டும். இதை விட்டு சென்னை ஆட்சியாளர் என்ன அறிக்கை விட்டாலும் பயனில்லை. கடந்த பல ஆண்டுகள் சென்னை சர்க்கார் எத்தனையோ அறிக்கை விட்டார்கள். என்ன ஆயிற்று? இன்று எல்லாப் பள்ளிகளிலும் இந்தி கட்டாயப் பாடமாகத்தானே இருக்கிறது? தங்கள் சக்திக்கும் அதிகாரத்துக்கும் மீறிய பிரச்சினையில் சென்னை சர்க்கார் வாக்குறுதி கொடுத்து பயனென்ன? ஆதலால் டில்லி ஆட்சியிடமிருந்து அதிகாரப் பூர்வமான அறிக்கைப் பெற முடியாவிட்டால், சென்னை ஆட்சியாளர் தாட்சண்யம் இல்லாதபடி தண்டனை விதிக்கட்டும். ஆறிலும் சாவு; நூறிலும் சாவு!

—23—7—55 வெளியூர் 'விடுதலை'யில், 'பெரியார் நிபந்தனை' என்ற கட்டுரையில்.

★

### காமராசருக்கு 'விடுதலை'யிட்ட வேலை!

★★கொடி கொளுத்தும் கிளர்ச்சியை நிறுத்தும்பொறுப்பு இனி பெரியார் அவர்களிடம் இல்லை. பண்டித நேரு அவர்களிடம் தான் இருக்கிறது. அவர் விரும்பினால் நிறுத்திவிடலாம். அவர்வீண் கவுரவம், பிடிவாதம் பாராட்டாமல் உறுதி அறிக்கை எழுதி சென்னை முதலமைச்சரிடம் கொடுத்தனுப்பிவிட வேண்டும்.

—24—7—55 வெளியூர் 'விடுதலை'யில் [தலையங்கம்]

★

### அப்போதே அறிவித்துவிட்டார், பந்த்!

★ இந்திமொழி சம்மந்தமான நிலைமை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் விளக்கப்பட்டுள்ளது. எந்த மக்கள் மீதும் இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிக்க நோக்கமே கிடையாது. இவ் விஷயத்தில் எவ்வித தவறானக் கருத்தும் கொள்ள இடமிருப்பதாக நான் நினைக்கவில்லை. எப்படியிருந்தாலும் இதற்கும் தேசியக் கொடிக்கும் சம்மந்தமில்லை. அரசாங்கம் தடையின்றி கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

—கோவிந்த வல்லப பந்த்—(இந்திய யூனியன் மந்திரி)
—புதுடில்லி, 24-7-55

★

★ இந்திய யூனியன் போலீஸ் அமைச்சர் பந்தின் எதிர் வாதம்!

—25-7-55 வெளியூர் 'விடுதலை'யில், பந்தின் அறிக்கைக்குத் தந்த தலைப்பு இது.

★

### போர்! போர்!

★ இந்திய யூனியன் கொடிக்கு தீமூட்டுங்கள்' அடக்குமுறைக்குத் தயாராக இருங்கள்!

—25-7-55 வெளியூர் 'விடுதலை'யில் அறிவிப்பு.

★

### கிளர்ச்சி நிறுத்தத்துக்கு 'விடுதலை' கேட்ட விலை!

★ இனி அடுத்தபடி என்ன?—டில்லி சர்க்காரின் அறிவிப்பு—கட்டாயமாக்க மாட்டோம் என்ற அறிக்கை-வெளிவந்து விட்டால் போதும்—அடுத்த விநாடி பெரியாரின் கிளர்ச்சி நிறுத்த அறிவிப்பு வெளியிடப்படும்.

—29-7-55 வெளியூர் 'விடுதலை'யில் (தலையங்கம்.)

### நேரு முதலிய மந்திரிகளின் சாகசம்-பெரியார் படப்பிடிப்பு!

★ நேரு முதல் மற்ற மந்திரிகள் எல்லாம் வீண் வாய்ஜால வார்த்தைகளால் ஏமாற்றுக்காரர்கள் என்பதை நிரூபித்துவிட்டனர். அவர்கள் பேசுவது எல்லாம் இந்தியை ஏதோ அலட்சியமாகவும், அதை மக்களிடம் புகுத்தமாட்டோம் — புகுத்தக்கூடாது என்றெல்லாம் ஆசை வார்த்தைகளில் பேசிவிட்டு, செயலில் அதற்கு நேர் மாறாக நடக்கின்றனர்.

—30-1-55 வெளியூர் 'விடுதலை'யில், பெரியாரின் 26-ம் தேதிய கோவைப் பேச்சு.

★

### களப் பார்வை!

★★★ பெரியாரின் வெற்றிகரமான சுற்றுப்பயணம்-ஆகஸ்ட் 1-ம் தேதி, சுமார் 2 இலட்சம் கொடிகள்கொளுத்தப்படலாம்.

—30-7-55 வெளியூர் 'விடுதலை'யில், விளம்பு கட்டிய செய்தி.

★

### சென்னை அமைச்சர் அறிக்கை!

★★★ எந்த மாநிலத்தின் அலுவல்களுக்கும் இந்தியை கட்டாயமாக அமுல் நடத்த வேண்டும் என்று கூறும் எதுவும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இல்லை. இந்த விஷயத்தில் முடிவு செய்வது மாநில சட்டசபைகளிடம் விடப்பட்டிருக்கிறது இந்த நிலைமை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது இது சம்மந்தமாக இந்திய யூனியன் தலைவர் அண்மையில் அய்தராபாத்தில் அளித்த வாக்குறுதியையும் குறிப்பிட விரும்புகிறேன் இந்தியை அரசாங்க மொழியாக ஆக்க வேண்டும் என்பதற்காக, படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளின் விளைவாக, தமிழ் மொழி பாதிக்கப்படக்கூடாது என்பதிலும் இம்மாநில அரசாங்கம் யாருக்கும் பின் வாங்கியதில்லை. இந்திய தேசியக் கொடி தேசிய கௌரவத்தின் சின்னம். அதைக் கொளுத்தும் போதோ, அல்லது அதை வேறு வகையில் மாசு படுத்தும் போதோ, எந்த அரசாங்கமும் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விடாது.

—காமராசர் அறிக்கை
—31-7-55 வெளியூர் 'விடுதலை'யில்.

★

கடைசியாக......
சென்னை அமைச்சர் அறிக்கைப்படி போர் ஒத்திவைக்கப் பட்டது!

Bleed through

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 5—8—55 வெள்ளி

## அந்தக் கண்ணோட்டம்!

ரஷ்ய விஜயத்தை முடித்துக் கொண்டு, 'ராஜோபசாரத்'தோடு இந்தியா திரும்பியபோது பஞ்சாபின் சிறைச்சாலைகளை சீக்கியக் காளைகள் நிறப்பியிருந்தார்கள் என்பது நமக்கெல்லாம் நினைவிருக்கும். மாஸ்கோவில் அவர் பெற்ற போதவுடைமை மணம் அடங்குமளவுக்கு பாஞ்சாலத்திலிருந்து அடக்குமுறை எனும் முடைநாற்றம் புதுடில்லி நோக்கிப் பறந்து வந்தது, பிரதமருக்கு நல்வரவு கூற! அப்போது தான் நேரு குறிப்பிட்டார்:

"பஞ்சாபில் உள்ளவர்களும் இதரர்களும் அங்கு நடைபெறும் கிளர்ச்சிகளை **உலகப் பிரச்சினை கண்ணோட்டத்தில்** பார்ப்பார்களேயானால், அந்தக் கிளர்ச்சிகள் யாவும் ஏளனத்திற்குரியவை—முக்கியத்துவ மற்றவை என்பது புலப்படும்!"

"அகாலியர்களிடையே அரசினர் கொள்கை குறித்து அறுவறுப்பா? அதற்காகக் கிளர்ச்சியா? அதன் காரணங்களை விரைவில் கவனிக்கிறேன்; குறைகளை முடிந்த அளவு களைந்தெறிகிறேன்!"— ஜனநாயகக் குழந்தைக்குத் தாலாட்டு பாடும் பண்டிதர் இவ்வாறு இதம் தரும் மொழிகளைப் பேசியிருப்பாரேயானால், அது இருட்டிலே நடமாடும் ஆயிரமாயிரம் அகாலியருக்கு நம்பிக்கைத் தீபமாக உதவியிருக்கும்.

ஆனால் அவரோ கசையடியினும் கொடிய வசைமாரி பொழிவதிலே பிரச்சினைகளுக்கு முடிவு தேட முனைந்து விட்டார்!

அகாலியரின் கிளர்ச்சியை அகில உலகக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அது ஏளனத்துக் குரியதாகுமாம்! ஏற்றுக்கொள்ள முடியாததாம்!—இவையெல்லாம் அவர் தொடுத்திருக்கும் ஏசல் கணைகள்!

ரஷ்யாவோடு தொடர்பு கொண்டவர்கள் 'அகில உலகக் கண்ணோட்டம்' பேசுவது, நமக்குப் புதிதல்ல; நாம் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன சரக்கு! அதுவும் புது உறவு கொண்டிருக்கும் இந்நாட்டுப் பிரதமர் பேசுவதிலே வியப்பென்ன இருக்கிறது?

அகில உலகப் பிரச்சினைகளின் கண்ணோட்டத்திலே பார்க்க வேண்டுமாம்!—பேசுகிறார் பிரதமர்!

ஆனால் அவரது குடையின் நிழலிலே அணிவகுத்த நிற்கிறதே காந்தியப் படை — அதன் நடவடிக்கைகளெல்லாம் அகில உலகக் கண்ணோட்டமெனும் கண்ணாடி நிகர் ஓடையிலே அலசி ஆராயப்படுகிறதா?—என்பதைத்தான் நாம் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

அகாலியர் மீது நேருவின் தாக்குதல் வெளியான சில நாட்களுக்குப் பிறகுதான் மைசூரின் முதல்வர் அனுமந்தையா புதியதொரு திட்டத்தை வெளியிட்டார். இராமாயணத்தை நாடெங்கும் பரப்புவதற்காக மூன்று லட்சம் ரூபாய்களைச் செலவிடப் போகிறாராம்! அவருடைய பணத்தையல்ல; அரசாங்கத்துப் பணத்தைத்தான் இராமாயண வளர்ச்சிக்கு விரயமாக்கப் போகிறார்!

அதுமட்டுமா? சென்ற கிழமை புதுடில்லியிலே நடைபெற்ற துளசிதாஸ் ஜெயந்திக்கு குடியரசுத் தலைவர் செய்தி அனுப்பியிருக்கிறார்-'துளசிதாசரின் ஜெயந்தி ஒரு **தேசியத் திருவிழா!** அதைத் தகுந்த முறையில் நாடு கொண்டாட வேண்டும்'—என்பதாக!

இராமாயணத்துக்குப் பிரச்சாரம் வழங்க மூன்று லட்சம் ரூபாய்களாம்! இராமகதை இயற்றிய துளசிதாசருக்கு இந்தியா ஜெயந்தி விழா நடத்த வேண்டுமாம்!—இந்த நிலையிலேதான் நேரு பேசுகிறார், 'அகில உலகக் கண்ணோட்டத்திலே பிரச்னைகளைப்பார்க்க வேண்டு'மென்று!

அகில உலகத்திலே எந்த நாட்டிலே புராணங்களைப் பரப்புவதற்கு வரிப்பணத்தை வாரி எடுத்து செலவு செய்கிறார்கள்? அங்கெல்லாம் பைபிளைப் பரப்புவதற்குப் பாதிரிகள் இருக்கிறார்களே தவிர, பாராள்வோர் அதிலே தங்கள் கவனத்தைச் செலவிடுகிறார்களா?

எந்த நாட்டிலே கோலோச்சும் குடியரசுத் தலைவர்கள் புராணம் பாடியவனுக்குத் தேசியத் திருவிழா கொண்டாடும்படி கூப்பாடு போடுகிறார்கள்? நேரு போய் திரும்பினாரே, அந்த ரஷ்ய நாட்டிலேதான் இதுபோன்ற விழாக்கள் இருக்கின்றனவா?

அங்கே புஷ்கினுக்கு நினைவு நாள் கொண்டாடுவார்கள்! மாக்சிம் கார்க்கியின் நினைவாக நகரும் தெருவும் நிர்மாணித்திருக்கிறார்கள்!

காரணம்—அந்தக் கலைஉலகச் சிற்பிகள் கற்பனை வரம்புக்குட்பட்ட கதாபாத்திரங்களை சிருஷ்டித்தார்கள் ஆனால் இந்நாட்டுத் துளசிதாசர்கள் கடவுள் அவதாரங்களை யல்லவோ நடமாட விடுகிறார்கள்?

மதச் சார்பற்ற நாட்டிலே இப்படிப்பட்டவருக்கென தேசீய விழாவொன்று இருக்கலாமா? தேசத்தின் தலைவர் அதுபற்றி பேசலாமா? இது அகில உலகக் கண்ணோட்டத்துக்குக் கட்டுப்பட்டதாகுமா? கண்டிக்கப்பட வேண்டியது இதுவா, அகாலியர் கிளர்ச்சியா? சிந்தனைக்கு வேலைதரும் தேசீயத் தோழர்களே! இந்தக் கேள்விகளை சமாதானக் கடலிலே அகிலஉலகக் கப்பல் விட்டு களித்திருக்கும் நேருவின் பக்கம் திருப்புங்கள்!

✶

## கோயங்கா ஏட்டின் கும்மாளம்!

பெரியார், கொடி எரிப்புக் கிளர்ச்சியை நிறுத்தியதைப்பற்றி வடநாட்டு கோயங்காவின் ஏடாம் தினமணி, ஜூலை 31-ம் நாள், **'ஸ்டண்ட் நாடகம்'** என்ற தலைப்பிட்டு ஒரு உபதலையங்கம் தீட்டியிருக்கிறது. காமராசரின் அறிக்கையிலே உறுதியின் வாடை சிறிது அடிக்கிறது என்று பெரியார் நம்புகிறார். ஆனால், "இல்லை; இல்லை; காமராசர் எமது ஏவல் கேட்கும் ஏஜண்டுதான்!" என்பதை கீழ்வரும் வாசகம் மூலம் 'தினமணி' விளக்குகிறது—படியுங்கள்!

"ஸ்ரீ காமராசரின் அறிக்கை ஒரு வெற்றி என்று சிலர் சொல்லக்கூடும். வெற்றியா என்பதற்கு ஒரே ஒரு சோதனை போதும். பழைய நிலைமைக்கும், புதிய நிலைமைக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. ஸ்ரீ காமராஜ் அறிக்கையில் ஒன்றும் புதிதல்ல. இருக்கிற நிலைமையை எடுத்துக் காட்டினார்."

—'தினமணி' 31—7—55.

## ரஷ்யாவில் மற்றொரு நேரு!

பிரதம மந்திரி நேருவுக்கு அடுத்தபடியாக சினிமா நட்சத்திரம் ராஜ்கபூரின் பெயர் ரஷியாவில் பிரமாதமாக அடிபடுகிறது.

ராஜ்கபூரின் 'அவாரா' படம் ரஷியாவில் பல இடங்களில் நடைபெறுகிறது. இப் படத்தை ரஷ்யர்கள் பிரமாதமாக ரசிக்கிறார்கள். ராஜ்கபூரை சில ரஷ்யர்கள் 'ஆவாரா தோழர்' என்கிறார்களாம்.

ரஷ்யாவிலிருந்து திரும்பிவந்த இந்திய பார்லிமெண்ட் கோஷ்டி மெம்பர்கள் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தனர்.

—'தினமணி' 31—7—55.

## முக்கிய அறிவிப்பு

'முரசொலி' அச்சாகும் காகிதம் குறித்த காலத்தில் கிடைக்காத காரணத்தால் இந்த வார இதழ் எட்டு பக்கங்களில் வெளிவர வேண்டிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அடுத்த இதழ் வழக்கம்போல—புதுச் சிறப்புகளுடன் 12 பக்கங்களில் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

One side page dark

### சென்ற இதழில்.....

பரிமளா தத்தளித்தாள்- கதியற்றவனைக் காப்பாற்றுவதா? காதலைத் தியாகம் செய்வதா? அல்லது காதலனுக்குத் துரோகம் செய்வதா? இந்த மூன்றில் ஒன்றை அவள் விரைவிலே முடிவு கட்டியாக வேண்டும். கடைசியில் காதலைத் தியாகம் செய்வது என்ற முடிவுக்கே வந்தாள்.

# புதையல்

**மு. கருணாநிதி**

## 34. போலீஸ் வந்தது!

**"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...**
**காக்கை மூக்கு நிழலிலே...**
**கள்வர் புகும் வழியிலே...**
**கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...**
**எழுபது கோடி பசும்பொன்... "**

துக்காராமோ, பரிமளாவிடமிருந்து எப்போது வரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துத் தவமிருந்தான். வெகுநேரம் வரையில் மௌனமாகவே மனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பரிமளா, உறுதியான முடிவோடு துக்காராமை அணுகினாள். அவளுக்குத் தெரியாது, போலீசார் துக்காராமைக் கைது செய்ய வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது! ஆனாலும் நிச்சயமாகவருவார்கள்; துக்காராமைப் பிடித்துச் செல்வார்கள் என்பதை அவள்தெரிந்து கொண்டாள். ஆகவே, மெதுவாக "துக்காராம்!" என்று அழைத்தாள். அவளுடைய அழைப்பிலே முன்னைவிட அதிகமாக அனுதாபம் கலந்திருந்தது. அவனோ அந்த அனுதாபத்தை அன்பின் உச்சம் என்று கருதிவிட்டான். ஆஸ்பத்திரியிலேயிருக்கும் நோயாளிகளுக்கு நர்சுப் பெண்கள் உதவி செய்யும் போதும், அவனை அனுதாபத்தோடு தொட்டுத் தூக்கிடும் போதும், "காதலில்லாவிட்டால் அவள் கரம் நம்மீது படுமா?" என்று ஒரு சில நோயாளிகள் எண்ணித் திருப்தி அடைவார்களாம். மேற்கொண்டு முயற்சிகளிலும் ஈடுபடுவார்களாம்.

அந்த நோயாளி நிலையிலே இருந்தான் துக்காராம். அதனால்தான் பரிமளாவின் அனுதாபக் குரலை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ சாதல் என்பது, ஒருஆணும் பெண்ணும்'கண்ணே! மணியே!!' என்று பேசுவது, கட்டித் தழுவுவது, கலகலவென சிரிப்பது--இதுபோன்ற நிகழ்ச்சிகளோடு முடிந்துவிடும் கதையென்று மட்டுமே அவன் நினைத்திருந்தான். அந்தக் கதையை ரசிக்க டிக்கெட் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தான்.

'துக்காராம்' என்ற அழைப்பிலேயே மனதைப் பறிகொடுத்த அவன், பற்களெல்லாம் தெரியும் படியாக "ஏன் பரிமளா?" என்று கேட்டான். அவன் கண் இமைகள் அசையாமல், அவளது இதழ் இன்னும் அசையுமா என்று எதிர் பார்த்து நின்றன. காதலைத் தியாகம் செய்யப் போகிறோம்: ஒரு கதியற்றவனை விடுவிக்கப் போகிறோம்-என்ற மனத் திருப்தியோடு பரிமளா அவனை நோக்கினாள்.

"துக்காராம்! உனக்காக நான் எவ்வளவு சங்கடப்படுகிறேன் தெரியுமா?" என்றாள், பேச்சுக்குப் பீடிகையாக!

"நானும் அப்படித்தான் தவிக்கிறேன்!" என்று நாக்குழறி நின்றான் அவன்.

"உன்னுடைய உயிருக்கு இன்னும் சில மணி நேரங்களில் ஆபத்துவரப்போகிறது!"-இதைக் கேட்டதும், அவன் நடுங்கினான்.

"என்ன சொல்லுகிறாய் பரிமளா?" தடுமாறினான் அவன்.

"கொடிய வழக்கு! கொலை கேஸ்! அதிலே நீ சிக்கிக் கொண்டாய்!"

"என்ன? என்ன?"

"ஆமாம்! வெள்ளியம்பலம் இப்போது போலீசாரோடு வரப் போகிறார். உன்னைப் போலீசாரிடம் பிடித்து ஒப்படைக்கப் போகிறார்"

"அய்யோ! எனக்கு ஒண்ணும் புரியலியே!"

"கவனமாகக் கேள்... ஆற்றங்கரையிலே கையிழந்த ஒரு பிணம்—ஞாபகமிருக்கிறதா?"

"ஆமாம்—ஆமாம்!"

"அந்தப் பிணம் விழக் காரணம் நீதான் என்று அம்பலம் உன்னைக் காட்டிக் கொடுக்கப் போயிருக்கிறார். நீ கொலை செய்ததை அவரே நேரில் பார்த்ததாகவும் சாட்சியம் கூறப் போகிறார்—உன் தலை தப்புமா, இனிமேல்?"

"தப்பாது! தப்பாது!! பரிமளா! ஏன் என் மீது இப்படி திடீர்னு ஒரு அபாண்டத்தைச் சுமத்தப் போறாரு?"

"அதெல்லாம் சொல்ல நேரமில்லை. சொல்லத் தேவையுமில்லை. எப்படியோ, உன் மீது கொலைக் கேஸ்ஜோடிக்கப்பட்டுவிட்டது!"

"பரிமளா! கொலைக் கேசுன்னு தூக்கு தண்டனையல்லவா கொடுப்பாங்க?"

"இல்லை; இல்லை-பல்லக்கில் வச்சு பவனி வருவாங்க!... துக்காராம்! நீ தப்புவதற்கு ஒரே வழிதானிருக்கிறது!"

"என்ன வழி?"

"எப்படியாவது நீ இங்கிருந்து ஓடிவிட வேண்டும்!"

துக்காராம் பலமாக யோசிக்கத் தொடங்கினான். அவன் கண் எதிரே விலங்கு — சிறைச்சாலை— தூக்குமேடை—எல்லாம் வரிசை வரிசையாக வர ஆரம்பித்தன.

ஓடிப்போவது- ஓடிப்போவது- என்று உச்சரித்துக் கொண்டே நின்றான். சிந்தனைக்கும் நடுக்கத்திற்கும் இடையே சிலந்தி வலை ஈ போலத் துடித்துக் கொண்டிருந்த அவன், திடீரென்று சிரிக்க ஆரம்பித்தான். "அய்யோ பாவம்; பைத்யம் பிடித்து விட்டது போலும்!" என நினைத்து அதிர்ச்சி அடைந்தாள் பரிமளா. பைத்யமில்லை என்பது அவன் பேச ஆரம்பித்த பிறகே தெரிந்தது. பரிமளா ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, தன்னை பயமுறுத்தி வெளியே துரத்திவிட முயலுகிறாள் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

"ஓகோ! உன்னைவிட்டு ஓடிவிடுவேன் என்று இப்படி பயமுறுத்துறியா? அதான் நடக்காது என்னிடம்!" என்று சிரித்துக் கொண்டே கத்தினான்.

அவளுக்கு எப்படியிருக்கும்? கிணற்றிலே விழுந்தவனை தூக்கி விட்டவனைப் பார்த்து உயிர் பிழைத்தவன், "ஓகோகோ! உன் கிணறுதானா இது! அதானே பார்த்தேன்—கிணறு அசுத்தமாகி விடுமே பிணம் கிடந்தால்-என்று பயந்து என்னைத் தூக்கி விட்டாயா?" என்று கேட்டால், துணை புரிந்தவனுக்கு எப்படியிருக்கும்? அந்த நிலையிலே பரிமளா இருந்தாள். என்னமோ; அவன் வெளியே ஓடாவிட்டால், அவனுக்கு அவள் இணங்கி விடுவாள் என்றும், அதற்காகவேதான் அங்கேயே இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்துகொண்டான். கொலைக் கேஸ், தூக்குத் தண்டனை-இதையெல்லாம் பரிமளா கூறும்போது உண்மையாகவே பயந்தான். ஓடிவிட வேண்டும் என்று அவள் யோசனை கூறிய பிறகு தான் "எப்படி ஓடுவது?" என்று சிந்திப்பதற்குப் பதிலாக "ஏன் ஓடச் சொல்லுகிறாய்?" என்று கோணல் வழியிலே கேள்வி போட ஆரம்பித்தான்.

"துக்காராம்! உண்மையாகவே சொல்லுகிறேன் — உயிருக்கு ஆபத்துவரப்போகிறது-ஓடிவிடு!" என்று பரிமளா மீண்டும் கெஞ்சினாள்.

"நீயும் வா! இருவரும் ஓடிவிடுவோம்!" என்று தந்திரமாகக் கூப்பிட்டான் அவன். துக்காராமின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவளும் அவனோடு ஓடிவிடலாம். ஆனால், அத்தானைக் காப்பாற்றுவதற்கு, அவள் அங்கே இருந்து ஆகவேண்டுமே என எண்ணி மீண்டும் துக்காராமை வலியுறுத்தினாள், "நீ முதலில் ஓடிவிடு! பிறகு நான் வருகிறேன்" என்று கூறி. அவனா கேட்பான்? அவன்தான் பரிமளா சூழ்ச்சி செய்கிறாள் என்று முடிவு கட்டி வைத்திருந்தானே; அவன் எப்படி ஓடுவான்? காப்பாற்ற வந்தவள் மீது கேலிக்கணை பொழிந்தான். 'செத்தால் சாகிறேன் போ!' என்று சிரித்தான்.

அவனது போக்கு அவளுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியது என்றாலும் அவனை நோக்கி எதிர்பாராமல் வரும் சாவை நினைத்து அவள் சங்கடப் பட்டாள். அதற்கு, தானே காரணமாகவும் ஒரு விதத்தில் அமைந்துவிட்டதையெண்ணி யெண்ணி மனம் புழுங்கினாள். எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் அவன் தன் பேச்சை நம்பமாட்டான் என்று திண்ணமாகத் தெரிந்தபிறகு அவனைவிட்டு ஒதுங்கி வேறு பக்கம் போய் உட்கார்ந்துகொண்டாள். 'நல்லவேளை, இவள் பேச்சில் மயங்காமல் போனோம். இவள் சொன்னதை நம்பியிருந்தால் என்ன ஆவது? இவள் எனக்குக் கிடைக்காமல் போய்விடுவாளே!' என ஆறுதல் மொழி கூறிக்கொண்டு துக்காராம் கம்பீரமாக வீட்டுக்குள்ளே உலவினான். 'அம்பலம் வந்ததும் அவரிடம் சொல்லி, பரிமளா திருமணத்தை முடித்துவிட வேண்டும். அப்படி முடித்துவிட்டால்தான் பரிமளா சொன்ன பேச்சு கேட்பாள். அம்பலம், என்னையும் பரிமளாவையும் காதலர் என்றே எண்ணியிருக்கிறார். பரிமளாவும் என்னைக் காதலிக்கவில்லையென்று உண்மையைச் சொல்லமுடியாது. சொன்னால் அம்பலம் பரிமளாவை ஆபத்துக்கு ஆளாக்குவார்; இது தான் சமயம்; அம்பலம் வந்ததும் திருமணம்!' என தனக்குள் பேசிக் கொண்டான். அவனுக்கு என்ன

தெரியும்; அம்பலம் அவனுக்கு "மாமியார் வீட்டு" அழைப்பு கொண்டுவருகிருர் என்பது!

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. பரிமளா திடுக்கிட்டெழுந்தாள். சுவற்றின் ஒரு மூலையிலுள்ள சிறிய ஓட்டை வழியாக வெளியே பார்த்தாள். அம்பலம், சப்-இன்ஸ்பெக்டர், ஜவான்கள் நின்றுகொண்டிருந்தார்கள். புரிந்துகொண்டாள், துக்காராமுக்கு அழைப்பு வந்துவிட்டது என்பதை போனல் போகிருன்; சொன்னேம்; கேட்கவில்லை: இவன் போனல் அத்தான் விடுதலை நிச்சயம்—என்று எண்ணி மகிழ முடியவில்லை அவளால்! ஏதுமறியாத அந்த வாலிபனுக்கு இவ்வளவு பயங்கரமான தண்டனை கிடைப்பதா? இதை அவளால் சமாளிக்கவே முடியவில்லை.

துக்காராம் கதவைத் திறக்கப் போனன். தாழ்ப்பாளில் அவன் கை படுவதற்கு முன்பு, பரிமளா ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக்கொண்டாள். அப்போதுகூட, அவளது அழகான கையின் மென்மையான ஸ்பரிசத்தால் ஏற்பட்ட இன்பத்தை நினைத்தே பெருமூச்சு விட்டான் அந்த இளிச்சவாயன்.

"முட்டாளே! இதோ பார், யார் வந்திருக்கிருர்கள் என்று!" —பரிமளா அவனை சுவற்றின் இடுக்கு வழியாக வெளியே பார்க்கச்செய்தாள். துக்காராம் தெளிவு பெற்ருன். பரிமளா சொன்னது உண்மையாகத்தானிருக்க வேண்டும் என்று புரிந்துகொண்டான்.

"சொன்னதை நம்ப மறுத்தாயே! இப்போது என்ன சொல்லுகிருய்? கொலைக் கேஸ்—விலங்கு வெளியிலே நிற்கிறது: விளங்குகிறதா இப்போதாவது?"-பரிமளா பரிதாபத்தோடும், கோபத்தோடும் கேட்டாள். துக்காராம் பேசாமல் நின்ருன். பேசமுடியவில்லை. பரிமளா, அவனிடத்திலே மளமளவென்று பேச ஆரம்பித்தாள்.

"பரிதாபத்திற்குரிய வாலிபனே! பயப்படாதே! இப்போதும் குடிமுழுகிவிடவில்லை. நானே உன்னைக் காப்பாற்றுகிறேன். கதவைத் திறக்காதே! அம்பலம் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வரத் துணியமாட்டார். ஏனெனில் நான் இருப்பது போலீசாருக்குத் தெரிந்து விடும் என்று பயப்படுவார்.

"என்னைஅவர் இங்கு வைத்திருக்கும் காரணம் என்ன தெரியுமா? நீ நினைத்துக் கொண்டிருக்கிருய்; உனக்குத் திருமணம் செய்வதற்காக என்று! எனக்கும் உனக்கும் திருமணம் செய்து வைத்துப் பார்க்க அம்பலத்திற்கு என்ன அவ்வளவு அக்கரை வந்தது? என்னை வைத்து என் காதலர் துரையைப் பிடிப்பதற்காக நடத்தப்படும் சதி நாடகம் இது! துக்காராம்! என்னை மன்னித்துவிடு! உனக்கு ஏற்பட்ட இவ்வளவு தொல்லைகளுக்கும் நான் தான் காரணம்! துரை என் அன்பர்! என் உயிர்! அவருக்கு அம்பலத்தால் வரும் ஆபத்தைத் தவிர்ப்பதற்காகவே, உன்னைக் காட்டிக் கொடுத்தேன். ஆனல், உனக்கோ பெரிய ஆபத்து காத்து நிற்கிறது இப்போது! இதிலிருந்து மீள வேண்டும் நீ!"

—என்று துடி துடிப் போடு பேசினுள் பரிமளா. வெளியே கதவைத் தட்டிக் கொண்டேயிருந்தார் அம்பலம்.ராமனும், "அய்யா! அய்யா!!" என்று உரக்க சப்தம் போட்டுக் கொண்டேயிருந்தான்.

பரிமளா உண்மையிலேயே தன்னைக் காப்பாற்ற முயன்றிருக்கிருள் என்பதைத் துக்காராம் உணர்ந்துகொண்டான். 'பரிமளா' என்ருன் மெதுவாக!—கண்ணீர் பெருகிவிட்டது அவனுக்கு! அவளும் அழுதுவிட்டாள். தன்னுல் வெறுக்கப்பட்ட ஒருவன்; அவனுக்காக அவள் கண்ணீர் விட்டாள்.

"இப்போது நாமிருவருமே சிக்கிக் கொண்டோமே!" என்ருன் அவன்.

"இல்லை! இல்லை! உன்னை சிக்க வைப்பதாக உத்தேசமில்லை!—உன்னைக் காப்பாற்ற முடிவுகட்டியிருக்கிறேன்."

"எப்படி பரிமளா?"

"சொல்வதைக் கேள்! இப்போது வீட்டுக்குத் தீ வைக்கப் போகிறேன். வீடு எரியும். ஊர் கூடும். அந்த சமயத்தில் எரியும் வீட்டுக்குள்ளேயிருந்து நீ ஓடிவிடவேண்டும். இருட்டில் யாரும் உன்னைக் காணமுடியாது!"

"நீ?..."

"நான் என் அத்தானைக் காப்பாற்றியாக வேண்டும்!"

"எரியும் வீட்டுக்குள்ளேயிருந்தா?"

"இல்லை; நானும் வெளியே ஓடுவேன்! ஆனல் உன்னேடு வர மாட்டேன். ஊராரும், போலீசாரும் கூடியிருப்பார்கள். என் அப்பாவும் அம்மாவுங்கூட இருப்பார்கள். அவர்களுக்கு நேரே சென்று, போலீசாரிடம், கொலைக் குற்றத்தை நானே செய்தேன் என்று கூறுவேன். என் அத்தான் துரையை சிறையிலிருந்து விடுவிக்குமாறு வேண்டுவேன்"

"நம்புவார்களா?"

"நம்பாவிட்டால் போகட்டும்; குழப்பமாவது ஏற்படுமல்லவா? எப்படியோ நீ தப்பிவிடுவாய். அது ஒரு திருப்தி எனக்கு! அடுத்தபடியாக, அத்தானை விடுவிக்கவும் முடியும் என்ற நம்பிக்கையிருக்கிறது எனக்கு! எப்படி என்று கேட்காதே! எனக்குத் தெரியும் அத்தானை விடுவிக்க வழி! போலீசாருக்கு எதிரிலேயே அம்பலத்தைக் குற்றவாளியாக்க என்னுல் முடியும்!"

"நீயும் குற்றவாளி என்று ஒப்புக் கொள்ளாவிட்டால்........... என்ன?"

"என் அத்தானை விடுவிக்க அதைத் தவிர வேறு வழி கிடையாதே துக்காராம்! உன்னைக் காட்டிக் கொடுப்பதா? காதலருக்குத் துரோகம் செய்வதா? காதலைத் தியாகம் செய்வதா? இப்படி மூன்று வழி யோசித்தேன். மூன்ருவது வழியே சரியென்று பட்டது!"

"அப்படியானல்..."

"இதோ வீட்டைக் கொளுத்துகிறேன். நீ ஓடுவதற்குத் தயாராகிக் கொள்!" என்று தீப் பெட்டியைக் கையிலே எடுத்துக்கொண்டாள் பரிமளா!

துக்காராம் அப்படியே நின்று கொண்டிருந்தான். தெருக் கதவு வேகமாகத் தட்டப்பட்டது. ராமனின் கூச்சலும்அதிகமாயிற்று. "துக்காராம்! துக்காராம்!!" என்று அம்பலம் கத்தினுர். பரிமளா உள்ளிருந்தபடியே. "இங்கே, துக்காராம் இல்லை!" என்று பதில் கொடுத்தாள். அம்பலத்துக்கு தூக்கிவாரிப் போட்டது.

"இது என்ன பெண்குரல்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"அவன் பெரிய வேஷக்காரப் பயல்! பெண்ணைப் போல பேசி ஏமாற்றுகிருன்" என்ருர் அம்பலம்.

உள்ளே, பரிமளா தீக்குச்சியைக் கிழித்து ஒரு துணியிலே வைத்தாள். அந்தத் துணியை எடுத்து கூரைப் பக்கம் போடுவதற்குக் கொண்டு போனுள். அசையாமல் நின்றிருந்த துக்காராம் ஓடிப்போய், அவள் கையைப் பிடித்துக் கொண்டான். பரிமளா "ஏன்?" என்று அதட்டினுள்.



தோழர் எஸ். வி. பதி
17—7—55 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயலாளர்

"பரிமளா!—என்னை மன்னித்து விடு!—உன்னை மிகச் சாதாரணமாக நினைத்து கேவலமாகவெல்லாம் விளையாடி விட்டேன்" என்று அழுதான் துக்காராம்.

அவளும், அவன் கையைப் பிடித்தவாறு அழுதாள். ஒருவர் கையை ஒருவர் பிடித்திருப்பதிலே இப்போது அவர்கள் எந்தவிதமான தவருன அர்த்தமும்கொள்ளவில்லை, சகோதரப் பாசத்தோடு இருவரும் நெருங்கி நின்ருர்கள். கண்ணீர் விட்டார்கள்.

"சரி! நேரமாகிறது-வீட்டைக் கொளுத்துகிறேன். நீ ஓடத் தயாராயிரு!" என்று மீண்டும் கூறிவிட்டு, பரிமளா எரியும் துணியுடன் திரும்பினுள். துக்காராம் அவளை அப்படியே இழுத்து கையை இறுகப் பிடித்தான். அவள் கையிலுள்ள தீயை கீழே விழச் செய்தான். அவளைப் பரபரவென்று அங்குள்ள அடுக்களை அறைக்குள்ளே தள்ளிவிட்டான். பரிமளா எதுவும் தோன்ருது திகைத்தாள். அடுக்களைக் கதவை வெளியே தாளிட்டான். மளமளவென்றுஓடிவந்துதெருக்கதவைத் திறந்தான். போலீசாரின் காலில் விழுந்து, "அய்யா! நான்தான் குற்றவாளி!-துரையை விடுவித்து விடுங்கள்!" என்று கூறி ஓவென அழுதான். போலீசார் அவன் கையில் விலங்கு மாட்டி அழைத்துச் சென்றனர்.

[ வளரும்]





# சிறு கதை

**பி.சி. கணேசன்,**
பி.எஸ்ஸி; பி.டி.

**சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே!**

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பத்திரிகையைப் பண்பு வளர்க்கும் பெண்ணுக உவமித்துக் கூறும் கவிதையிலே, சிறுகதையைப் பற்றிக் குறிப்பிடுகிருர். ஆங்கிலச் சிறுகதை எழுத்தாளர் மன்ரோ, சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன், 'வெஸ்ட் மினிஸ்டர் கெஸட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ள சிறுகதையொன்று, வழக்கமாகச் சிறுகதையாக்கப்படும் பிரச்சினைகள் எதையுமே தீண்டாமல், ஒரு சிறு சம்பவத்தை நிலைக்களனுக்கி, அழகான வாழ்க்கைத் தத்துவத்தைத் தீட்டிக் காட்டுகிறது. சிறந்த உலகச் சிறுகதைகளுள் ஒன்ருகக் கருதப்படும் அந்தக் கதை, இதோ, கீழே படித்துப் பாருங்கள்!

★

அந்தி நேரம். லண்டனிலுள்ள பிரபலமான ஹைடு பார்க்கின் மூலையொன்றில் உள்ள பெஞ்சியின் மேல், நார்மன் காட்ஸ்பி வந்து உட்கார்ந்தார். தூரத்தில் மின்சார விளக்குகள் லண்டனை ஒளிமயமாக்கிக் கொண்டிருந்தன. லண்டன் நகரத்துக் கூச்சலும், கும்மாளமும், காட்ஸ்பிக்கு ஏனே வெறுப்பாக இருந்தது. தனிமையை இன்று மிகவும் ரசித்தார். அந்திநேரம் இருக்கிறதே, அது வாழ்க்கையில் தோற்றுப் போனவர்களுக்கு உகந்த நேரம் என்று அவருக்குப் பட்டது. வாழ்க்கையின் வீழ்ச்சிகளை, அந்த வீழ்ச்சிகளால் ஏற்பட்ட வடுக்களை, உலகத்தின் பார்வையிலிருந்து மறைத்துக் கொண்டு எவர் கண்ணிலும் படாமல் ஏகாந்தமாக வீற்றிருக்க அந்திப் பொழுதைவிடச் சிறந்த நேரமில்லையென்பது அவருடைய முடிவு. ஒளியில் உலவிப் பிறர் பார்வையில் படப் பயப்படும் வௌவாலைப் போல இருளைத் தேடித்தான் ஹைடுபார்க்கின் ஒரு மூலையில் வந்தமர்ந்தார்.

அவருக்கு அடுத்தாற்போல் அதே பெஞ்சியின் மேல் முதியவரொருவர் அமர்ந்திருந்தார். வாழ்க்கையின் சாரத்தையெல்லாம் இழந்துவிட்டு, சக்கையாகிவிட்ட தோற்றம் அவருக்கு. முறுக்கிழந்து போன தந்திகளைக் கொண்ட வீணை அவர் இப்போது! நாதம் எழும்ப வழியே இல்லை. சற்று நேரத்திற்கெல்லாம் அந்த முதியவர் மெதுவாக எழுந்து தள்ளாடிக் கொண்டே பார்க்கை விட்டு வெளியே நடந்தார். அவர் காலி செய்து விட்டுப் போன இடத்தில் ஒரு வாலிபர் வந்து அமர்ந்தார். இந்த வாலிபர் அந்த முதியவரை விடச் சற்று அழகாக உடை உடுத்தியிருந்தாலும், முதியவரைப் போலவே இவருடைய முகத்திலும் சோகக் களை தாண்டவமாடியது. அந்த வாலிபர் பலமான பெருமூச்சு விட்டு உலகத்தின் மீது அவருக்குள்ள வெறுப்பைக் காட்டிக் கொண்டார்.

“ஏதோ உங்களுக்கு மனவேதனை போலிருக்கிறது”, என்று, அவருடைய பெருமூச்சைக் கவனித்ததற்கு அடையாளமாக காட்ஸ்பி பேச்சை ஆரம்பித்தார்.

“என்னைப்போல் முட்டாள்தனமாக நடந்து கொண்டிருந்தால், நீங்களும் இப்படித்தான் மனவேதனைப் படடுக் கொண்டிருப்பீர்கள்” என்று இளைஞர் சற்று உரிமையோடு உரையாடலைத் துவங்கினுர்.

“அப்படி என்ன செய்தீர்கள்?”

வாலிபர் விஷயத்தை விளக்கினுர்: “லண்டனுக்கு நான் புதிது. வந்தவுடன் டாக்ஸிக்காரன் என்னை ஒரு ஓட்டலில் இறக்கினுன். ஓட்டலில் என்னுடைய சாமான்களையெல்லாம் வைத்துவிட்டு, கொஞ்சம் சில்லறையை மட்டும் எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு சோப் வாங்குவதற்காக கிளம்பினேன். நாலைந்து தெருக்கள் தாண்டிப் போய்சோப் வாங்கியபின் திரும்பிப்போக வழி தெரியவில்லை. ஓட்டலின் பெயரும் விலாசமும் என் நினைவுக்கு வரவில்லை. அவைகளைக் குறித்து வைத்துக் கொள்ளவும் மறந்து விட்டேன். இப்பொழுது நண்பர்களே இல்லாத ஊரில், கையில் போதுமான காசில்லாமல் இரவை எப்படிக் கழிப்பது என்று தெரியாமல் விழிக்கிறேன். என்னுடைய கெட்டிக்காரத் தனம் எப்படி?”

இப்பொழுது இருவரிடையேயும் பொருள் பொதிந்த மௌனம் நிலவியது.

“நான் ஏதோ கதையளக்கிறேன் என்றுதானே நினைக்கிறீர்கள்?” என்ருர் வாலிபர் காட்ஸ்பியைப் பார்த்து. அவருடைய குரலில் கோபத்தின் சாயலும் இருந்தது.

“சேச்சே, அப்படியொன்றும் இல்லை. இதே மாதிரி அனுபவம் ஒருசமயம் எனக்கும் ஏற்பட்டது. ஆனல் நான் தங்கிய ஓட்டல் ஆற்றங்கரையோரமாக இருந்ததால், ஆற்றை அடையாளம் கண்டு அதன் கரையோரமாகவே சென்று, என் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து விட்டேன்.”

“நல்ல காலம், நீங்களாவது என் கதையை நம்பினீர்களே! அதுவரைக்கும் நல்லதுதான்” வாலிபர் காட்ஸ்பியிடமிருந்து ஏதோ உதவி எதிர்பார்த்தார்!

“உங்கள் கதையை நிரூபிக்க, நீங்கள் வாங்கிய சோப்பை இன்னும் என்னிடம் காட்டவில்லையே!” என்ருர் காட்ஸ்பி.

உடனே அந்த வாலிபர் சோப்பை எடுக்கக் கால் சட்டைப் பைக்குள் கையை விட்டார். “அடக் கஷ்டகாலமே! சோப்பைக் காணுமே—அதையும் எங்கோ தொலைத்து விட்டேன் போலிருக்கிறதே!” என்று கூறிக்கொண்டே வாலிபர் துள்ளிக் குதித்து எழுந்தார்.

“சோப் வாங்கப்போன இடத்தில் வழியைமறந்தது, பிறகு ஓட்டல் பெயரை மறந்தது, முடிவில் இவற்றிற்குக் காரணமான சோப்பையே இழந்தது — ரொம்ப அழகான கதை!” என்று கூறிவிட்டு காட்ஸ்பி வாலிபரை நிமிர்ந்து பார்த்தார். அதற்குள் வாலிபர் வேகமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்து கொண்டிருந்தார்.

“பாவம், சோப் வாங்கப் போன விஷயம்தான் ஆசாமியுடைய கதையையே நம்ப வைத்தது. அந்த சோப் விஷயமே அவருடைய பொய்யையும் காட்டிக் கொடுத்துவிட்டது. இவ்வளவு அழகாகக் கதையை ஜோடித்தவர் ஒரு சோப்பையும் வாங்கிப் பையில் போட்டுக்கொண்டு வந்திருக்கக் கூடாதா?” என்று எண்ணிக்கொண்டே காட்ஸ்பி வீட்டுக்குப் போக எழுந்தார். ஏதோ காலில் தட்டுப்பட்டது. குனிந்து எடுத்தார். என்ன ஆச்சரியம்! உறை கிழிக்கப்படாத புதிய சோப்புக் கட்டி அது! ஆம், அந்த வாலிபருடைய பையிலிருந்துதான் அது தவறி விழுந்திருக்க வேண்டும். அடுத்த விநாடியே காட்ஸ்பி அந்த வாலிபரைத் தேடிக் கொண்டு புறப்பட்டார். பல இடங்களில் தேடியும் வாலிபர் காணப்படவில்லை. காட்ஸ்பி மிக்க மன வேதனையடைந்தார். இனித் தேடிப்பயனில்லை என்ற முடிவோடு வீட்டை நோக்கிப் புறப்பட்டார். வழியில் வாலிபர் ஒரு தெருவின் முனையைத் தாண்டிப் போவதைப் பார்த்தார். உடனே அவர் அருகில் ஓடி அவரை அழைத்தார். வாலிபர் சற்று வெறுப்புணர்ச்சியோடு காட்ஸ்பியை ஏற இறங்கப் பார்த்தார்.

“உங்கள் கதையை மெய்ப்பிக்கும் சாட்சியம் இதோ கிடைத்து விட்டது” என்று காட்ஸ்பி சோப்புக் கட்டியை வாலிபரிடம் நீட்டினுர். “நீங்கள் உட்கார்ந்தபொழுது உங்கள் பையிலிருந்து தவறி விழுந்திருக்க வேண்டும். நான் வீட்டுக்குப் புறப்பட எழுந்தபொழுது, தரையில் கிடப்பதைப் பார்த்தேன். உங்களைப் பற்றி தவருக எண்ணியதற்கு மன்னிக்க வேண்டும். சந்தர்ப்பம் அப்படித் தவருக நினைக்கச் செய்துவிட்டது. இந்த ஒரு பவுன் நோட்டையும் உங்கள் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்...”

வாலிபர் சோப்பையும் பணத்தையும் நன்றியுணர்ச்சியோடு பையில் வாங்கி வைத்துக்கொண்டார்.

“சோப்பைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். அது உற்ற நண்பனுக உங்களுக்கு உதவி செய்திருக்கிறது” என்ருர் காட்ஸ்பி.

வாலிபரின் உதடுகளில் ஒரு புன்னகை தெளிந்தது. காட்ஸ்பிக்கு நன்றி தெரிவித்துவிட்டுத் தன் வழியைத் தொடர்ந்தார்.

“நான் செய்த உதவி அவருக்கும் பெரும் ஆறுதலாக இருக்கும். சந்தர்ப்பத்தைக் கொண்டு ஒரு மனிதனுடைய நடத்தையை நிர்ணயிப்பது எவ்வளவு முட்டாள்தனம்; அந்தச் சம்பவம் எனக்கொரு நல்ல படிப்பினை” என்று எண்ணியபடியே காட்ஸ்பி வீட்டை நோக்கி நடந்தார். பார்க்கின் வழியே அவர் உட்கார்ந்திருந்த இடத்தைத் தாண்டிச் செல்லும் பொழுது, பெஞ்சியின் அடியில் ஒரு முதியவர் எதையோ குனிந்து பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் சென்றபிறகுதான், ஆரம்பத்தில் உட்கார்ந்திருந்த முதியவர்தான் அவர் என்று காட்ஸ்பிக்குத் தெரிந்தது.

“பெரியவரே, என்ன தேடுகிறீர்கள்? எதையாவது தொலைத்து விட்டீர்களா?” என்ருர் காட்ஸ்பி.

“ஆமாம், புதிதாக வாங்கிய சோப் ஒன்றைத் தொலைத்து விட்டேன!” என்ருர் பெரியவர்.

★

# பிறை வானம்

## பிள்ளைகள் பகுதி...



# 'கல்' சொன்ன கதை

"கோயில் முடியே கிடக்கிறது!"

"ஆமாம்: பக்தர்களின்பாதங்கள் பட்ட இடமெல்லாம்—பாடகர்களின் குரல் ஒலித்த திக்கெல்லாம்—பயங்கர அமைதியில் மூழ்கிக் கிடக்கிறது. கோயிலிலே 'கடவுள்' இருந்தார். துணைக்கு இருந்தவை விஷப்பூச்சிகளும், வெளவால்களும்தான்!"

"அது மட்டுமல்ல; அந்த ஊரின் தேர் திருவிழாவும் இப்போது கிடையாது. ஆயிரக்கணக்காஞேர் வியர்வை சிந்தி இழுக்க—அதைப் பல்லாயிரக் கணக்காஞேர் கண்டு களிக்க — அசைந்தாடி ஊர்ந்து வரும் பெரிய தேர், கவனிப்பாரற்று கிடக்கிறது. தேரில் அமர்ந்து செல்ல வேண்டிய ஆண்டவனே ஆதரிப்பாரற்றுக் கிடக்கும்போது, அதற்கென்ன வந்தது?"

"பல வருடப் பழக்கங்கள்—பகவானுக்குச் செய்ய வேண்டிய திருப்பணிகள் — நின்று விட்ட காரணம்தான் என்ன?"

"காரணமா? அதை நினைத்தால் இப்போதுகூட உடல் நடுங்குகிறதே!"

—என்றெல்லாம் ஊரார் பேசிக் கொள்கிறார்கள்.

ஆனால், என் குரலை கேட்பார் யாருமே இல்லை. என்ன இப்படி விழிக்கிறீர்கள்? யார் பேசுகிறது என்ரு? பூட்டிக் கிடக்கும் கோயிலுக்குள்ளே—புழுதி படிந்த தோற்றத்தோடு — அடைபட்டுக் கிடக்கிறேனே அந்தக் 'கல்'தான் பேசுகிறேன். ஆனால் நான் ஒரு 'மாஜி'க் கடவுள்!

★

எங்கேயோ ஒரு ஆற்றங்கரையோரத்தில் கிடந்தேன் நான். என்னைத் தேடிப் பிடித்தார்கள். சுத்தியலாலும், சம்மட்டியாலும் அடித்தார்கள். எனக்கு ஒரு உருவத்தையும் கொடுத்தார்கள். 'ஏது செய்யப் போகிறார்கள் என்னை?' என்று நான் பயந்தேன். பயந்தது போல் வேதனை ஒன்று நிகழ்ந்து விட்டது. என்னைக் கைதியாக்கி விட்டார்கள். இந்தக் கோவிலில் கொண்டு வந்து அடைத்து விட்டார்கள். அன்று முதல் எனக்குப் பால் வரும்; பழரசம் வரும்; பழவகை குவியும்—ஆனால், அனைத்தும் அர்ச்சகர்கள் வீட்டுக்குச் செல்லும்! நான் அந்த பகிரங்கத் திருட்டை — பகல் கொள்ளையைப் பார்த்துக் கொண்டேயிருப்பேன்.

அசுத்தமான எண்ணெய் வாடை—ஒரே புழுக்கம்—எனக்கு இந்தச் சிறிய அறை சித்ரவதைக் கூடமாகத் தோன்றியது. ஆனாலும் எனக்கு சிறிதளவு ஆறுதலைத் தந்தது ஒன்றே ஒன்றுதான். தினம் தவருமல் என்னைப் பார்க்க ஆயிரக் கணக்கான மக்கள் வருவார்கள்; என்னைக் கும்பிடுவார்கள்; காலில் விழுவார்கள்; பாடுவார்கள். எனக்குச் சிரிப்புதான் வரும். 'ஐயோ! மக்களே!' என்ற ஏளனமும் தோன்றும்.

இப்படியே என் வாழ்நாள் ஓடியிருந்தால் பரவாயில்லையே! அந்த பயங்கரச் சம்பவங்கள்—என் சுகவாழ்வைக் கெடுத்த சோக நிகழ்ச்சிகள்—அப்பப்பா! இன்று நினைத்தாலும் எனக்கே பயமாக இருக்கிறது! ஆனால் அத்தனைக்கும் காரணம் நான்தானும்! இப்படி பழி சுமத்துகிறது உலகம்—தூற்றுகின்றனர் ஊரார். நான் என்ன செய்வது? நீங்களே கேளுங்கள். பிறகு சொல்லுங்கள்.

★

வழக்கமாக ஆண்டுக்கொரு முறை எனக்கு இரண்டு நாட்கள் விடுதலை கிடைக்கும். அந்த இரு நாட்களில், நான், ஊரின் முக்கிய நான்கு வீதிகளையும் சுற்றிவர வேண்டும். சாதாரணமாக அல்ல; ஆயிரக் கணக்கான ரூபாய் செலவில் அலங்கரிக்கப்பட்ட தேரில்!

அதைப் போல் அந்த வருடமும் நான் தேருக்குத் தூக்கிச் செல்லப் பட்டேன். வழக்கத்துக்கு மாறுக அந்த வருடம் தேர் மிக மிக அழகாக இருந்தது. செலவு அதிகமாம். அதற்குக் காரணமும் இருந்தது. என்னைச் சுற்றி வந்த பக்தர்களின் வாய்மூலம் நான் அதை உணர்ந்தேன்.

ஊர் பெரும் பணக்காரர் ஒருவருக்கு குழந்தையே இல்லாமல் இருந்ததாம். கடைசியில் 'எனக்கு' வேண்டிக் கொண்டாராம். 'கடவுளே! எனக்கு ஒரேஒரு குழந்தை கொடு; அந்தக் குழந்தையை விட்டே உன்னைத் தேர் இழுக்கச் செய்கிறேன்'—இதுதான் வேண்டுகோள். நான் 'சரி' என்று சொல்லவில்லை. ஆனால், அவர் நான் சம்மதம் தந்துவிட்டதாக எண்ணிப் போயிருப்பார். கடைசியில் அவருக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பையன் பிறந்து விட்டானும். இப்போது அவனுக்கு நான்கு வயது முடிகிறது. வேண்டுகோள் நிறைவேற்றப் பட வேண்டாமா? இந்த வருடம் அந்தப் பொடியனும் என் தேரை இழுக்கப் போகிறுனும். செலவெல்லாம் அந்தப் பணக்காரருடையதாம். அதிகமாகவே செலவு செய்து விட்டாராம். பிள்ளை கிடைத்த மகிழ்ச்சி அவருடையது! ஆனால்... அவருக் கெப்படி முன்னுல் தெரியும், பின்னுல் நடக்க இருந்த நாசத்தைப் பற்றி!

★

தாரை தம்பட்டம் முழங்கியது. 'ஓகோ' என்ற பேரிரைச்சல். நான் அமர்ந்திருந்த தேர் கிழ வீதியைத் தாண்டி தெற்கு வீதி முனையை அடைந்தது. ஊர்ந்தது.

பணக்காரரும், அவர் பாலகனும் முதலில் நின்று கொண்டிருந்தார்கள். பனைமரத்தைப் போல் பருத்திருந்த கயிறின் மேல் அந்தச் சிறுவனின் கைகள் இருந்தன. இழுத்தான். தேர் நகர்ந்தது. அவன் பற்களெல்லாம் தெரியச் சிரித்தான். அவனுக்கு நினைப்பு, தன் கை படவேதான் அவ்வளவு பெரிய தேர் நகருகிறதென்று. அவனுக்கென்ன தெரியும், பின்னுல் இரத்தம் போல் சிவந்த இரு பதினுயிரம் கைகள், 'சொடேர்; சொடேர்' என்று ஒலித்த சாட்டையடிக்குப் பயந்து கொண்டு தேரை இழுத்துக் கொண்டிருக்கிறது—என்ற உண்மை!

அவன் சிரித்தான்: சிரித்துக் கொண்டேயிருந்தான். பாவம், சிரித்துக் கொண்டே சாகப் போவது அவனுக் கெப்படித் தெரியும்? தயாராகிக் கொள்ளுங்கள், ஒரு பயங்கரமான செய்தியைக் கேட்க.

தேர் ஊர்ந்து கொண்டிருந்தது. சிறுவன் தேர்ச் சக்கரங்களுக்கு அருகில் தத்தித் தத்தி நடந்து கொண்டு வந்தான். ஓரிடத்தில் சற்று பள்ளம்—தேர் வேகமாக நகர்ந்தது. சக்கரங்கள் வேகமாக உருண்டன. அதே சமயம்... உருண்டுவந்த பெரிய சக்கரம் ஒன்றுக் கிடையில்...

'ஐயோ!...' என்ற பணக்காரரின் அலறல். தேர் இழுப்போரின் சப்தத்தை மீறி—தம்பட்ட ஓசையை மீறி—எழுந்தது. சக்கரத்துக் கடியில் சிக்கிவிட்ட மகனை நோக்கிப் பாய்ந்தார் அவர். பீறிட்டடித்த இரத்தம் அவர் முகத்தை—உடையை — உடலை — எல்லாம் நனைத்தது.

கூட்டம் கலைந்தது. பையன் பலியானுன். 'அட கடவுளே! இது அடுக்குமா உனக்கு?'—கூட்டம் என்னை சபித்தது! நான் என்ன செய்வேன்? குற்றம் என் மீதா? எனக்குக் குரலெடுத்துக் கத்த சக்தியிருந்தால். 'ஐயோ ஆபத்து!' என்று அலறி இருப்பேன்! என்ன செய்வது?

இந்த சம்பவத்தால் நான் ஒரு நாள் கோயிலுக்கு தாமதமாக வந்தேன். ஆனால்..., கோவிலுக்குள்ளேயே பார்ப்பாரற்று கிடக்கிறேனே இன்று — அந்நிலை ஏன் வந்தது?

★

அன்று நடுநிசி... எனக்கு அந்தப் பயங்கர சம்பவத்திஞல் ஏற்பட்ட பயம் இன்னும் நீங்கவில்லை. தனியாக உட்கார்ந்திருந்தேன். அப்போது அந்த இருட்டில் தலைவிரி கோலமாக ஒரு அம்மாள் கோயிலுக்குள் ஓடிவந்தார்கள். நேரே என்னருகில் வந்தார்கள். நான் கூர்ந்து கவனித்தேன். புரியவில்லை. அதே சமயம் அந்த அம்மாள், "ஐயோ,பாவி! எத்தனை நாளாக இரத்த வெறி பிடித்திருந்தாய்? என் மகன்தானு உனக்குக் கிடைத்தான்?" என்று கத்திஞர்கள்.

நான் புரிந்து கொண்டேன், அந்த அம்மா யாரென்று. அப்பப்பா! அந்த அம்மாவின் கதறல்—சிந்திய கண்ணீர்—கொஞ்ச நஞ்சமல்ல! அதுமட்டுமல்ல; இன்னுமொரு பயங்கரமும் அப்போது நிகழ்ந்தது. என்ன சொல்வேன்; இரண்டாவது கொலைக்கும் நான் காரணமாகிவிட்டேன்! அதுவும்—அக் கொலை என் எதிரிலேயே!

கோயிலுக்குள்ளேயே அந்த அம்மா தூக்கிட்டுக் கொண்டார்கள். மகனைப் பிரிந்த சோகம்—கடவுளும் கைவிட்டு விட்டாரே என்ற வேதனை—அந்த அம்மாவை சாவுக்குத் தூண்டியது!

★

மறுநாள் ஊர் அல்லோலகல்லோலப்பட்டது. கோயில் கதவுகள் சாத்தப்பட்டன. "அடடா, ஆண்டவனே!" என்று பாடிய பக்தர்கள் ஓடுகிருர்கள். அன்று முதல் தினம் இரவில் ஒரு பைத்தியக்காரன் வருவான்; கோயில் வாசலில் படுப்பான்; என்னைப் பார்த்து திட்டுவான்; சமயத்தில் என்னையே கல்லால் அடிப்பான்; இப்போது புரிந்திருக்குமே, அவன் யாரென்று! வேறு யாருமல்ல; மகனைப் பறிகொடுத்த பணக்காரச் சீமான்தான் அவன்!

ஆயிற்று; நேரம் நெருங்கிவிட்டது. அவன் வந்து விடுவான்; திட்டுவான்; அடிப்பான்; எத்தனை நாளைக்குத்தான் நான் இந்த சித்ர வேதனையைப் பொறுத்துக் கொண்டிருப்பது? கடவுளாம் நான்; நான் எதுவும் செய்ய முடியுமாம்; நடந்த சோகத்துக் கெல்லாம் நான்தான் காரணமாம்;—இப்படிப் பேசுகிருர்கள்; ஏசுகிருர்கள். வலிய வந்த வம்புக்கு நான் எப்படி பொறுப்பாவேன்? நானு கடவுள் என்றேன்? நானு என்னுல் எதுவும் முடியும் என்றேன்? சொல்லுங்கள்; சொல்லுங்கள்!...

தம்பிகளே! என் கதையைக் கேட்டீர்கள். எனக்கு ஒரு உதவி செய்வீர்களா? என்னை இந்தக்குகையிலிருந்து வெளியேற்றவேண்டும். எப்படியாவது புரட்டிப் புரட்டி பழைய ஆற்றங்கரையிலேயே கொண்டு போய் சேர்த்துவிட வேண்டும்! உங்களுக்குப் பிடித்தமான வேலை—விளையாட்டு! செய்வீர்களா?. கொஞ்சம் தயவு செய்யுங்கள்!...கெஞ்சுகிறேன்!...

—சொர்ணம்

## சிறிய வயதில் பெரிய மனிதர்!

அது ஒரு நாடகக் கொட்டகையின் வாசல். அங்கே துடிதுடிப்புடன் நிற்கிருன் ஒரு சிறுவன். ஏக்கக் கண்கள்—ஏமாற்றப் பார்வை—அவன் எதைத்தான் எதிர் பார்த்து நிற்கிருன்?

அந்த சமயம்...!

நாடகக் கொட்டகையின் முதலாளி வெளியே வந்தார். சிறுவன் அவர் முன்னுல் பாய்ந்தான்.

முதலாளி அவனை விரட்டினுர். அவன் காலையே பிடித்து விட்டான். கெஞ்சினுன். அழவும் செய்தான். ஏன்? காசுக்காகவோ, சாப்பாட்டுக்காகவோ அவன் கெஞ்சவில்லை. அவன் கேட்டதோ நாடகத்தில் நடிக்க ஒரு வாய்ப்பு! நினைத்தவுடன் கிடைக்காது தான் அது. ஆனுல் அந்தப் பையன் விடுபவனுக இல்லை. "ஒரு நிமிஷம் மேடையில் நிற்க அனுமதி கொடுங்கள்: போதும்" என்று துடித்தான்.

தொந்திரவு பொறுக்க முடியவில்லை அவரால். சில நிமிஷங்கள் மேடையில் தோன்றக் கூடிய 'வேஷம்' ஒன்றைத் தந்தார்.

ஏதோ தொல்லைக்குப் பயந்துதான் அவர் அதைச் செய்தார். ஆனுல் சற்று நேரத்தில் இந்தச் செயல் அவருக்கு எல்லையில்லா மகிழ்ச்சியைத் தந்தது. அந்த சில நிமிஷங்களில் நாடகம் பார்க்க வந்தவர்கள் அனைவரையும் அழ வைத்து விட்டான் அந்தச் சிறுவன், தன் நடிப்பின் மூலம்!

அவன் யார் என்று அறிய ஆவலா? அவன்தான் சிறுவர்களுக்கு கதை எழுதிப் புகழ் பெற்ற ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆண்டர்சன்!

# கடைசிப் பக்கம்

## 'எழுத்தாணி'

இசை இறை. வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.

(?) நம்முடைய சமுதாய அரசியல், பொருளாதாரத் துறைகளில் தடையாக உள்ள 'கல்' எது? 'முள்' எது?

ஒன்று கோயிலிலே! மற்றொன்று புரட்சிப் பாதையிலே!

கே. டி. வேலன்; முள்ளிப்பாடி.

(?) காங்கிரஸ் வரலாற்றின் முடிவு எப்படிப் பட்டதாயிருக்கும்?

பெரும்பெரும் சாம்ராஜ்யங்களின் முடிவைப்போலத்தானிருக்கும்.

செல்வராசு; புதுப்பேட்டை.

(?) அயர்ந்த தூக்கத்திலிருக்கும் குழந்தைகள் சிரிப்பதற்கும் அழுவதற்கும் காரணம் என்ன?

இன்பமும் துன்பமும் சேர்ந்து வரும் உலகில் வாழ்வதற்கு, தொட்டிலிலேயே பயிற்சி பெறுகின்றன. அவ்வளவு தான்!

(●) வி.சடாச்சரம்; ஆரியப்பட்டி.

(?) காந்தியாருக்குப் பிறகு காங்கிரசின் வாரிசு நேரு–நேருவுக்குப் பின்னால்?

"செய்திப் படங்கள்."

கண்ணன்; வடுகை தனிச்சியம்.

(?) இந்திய கம்யூனிஸ்டுக்கும் ரஷ்ய கம்யூனிஸ்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ரஷ்ய கம்யூனிஸ்டுகள் சொந்த மூளையை உபயோகிக்கிறார்கள்.

"காபஇரான்" சிங்காரத்தோப்பு, திருச்சி.

(?) கட்சிவிட்டுக் கட்சி மாறும் பச்சோந்திகளின் கல்லறை மீது வருங்கால சமுதாயம் எந்த எழுத்துக்களைப் பொறிக்கும்?

"இவர் ஒரு காங்கிரஸ் மந்திரியாக இருந்தார்" என்ற எழுத்துக்களை!

வ. சக்திவேல்; திருவாரூர்.

(?) முட்டாள்களின் முன்னோடி யார்?

அரைகுறைப் புத்திசாலி!

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்;
(●) வி. சடாச்சரம்,
ஆரியப்பட்டி கிராமம்
உசிலம்பட்டி (வழி)
(மதுரை மாவட்டம்)

தயா. ஜெயபால்; காரமடை.

(?) குழந்தையின் புன்னகைக்கும் காதலியின் புன்னகைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

குழந்தையின் புன்னகை காலணாவோடு பலூனோடு நின்றுவிடும்! காதலியின் புன்னகையோ பொன்னகைக்குச் செலவு வைக்கும்!

முருகேசன்; காரமடை.

(?) காதலர் நிலவை விரும்புவதேன்?

நிலவுக்கும் பைத்தியத்திற்கும் அறிவியல்படி தொடர்பு இருக்கிறதாம். காதலும் ஒருவிதப் பைத்தியம்தானே! எனவே தான் காதலர் நிலவை விரும்புகின்றனர்.

ப. ராஜ்; ஏத்தாபூர்.

(?) ஓய் எழுத்தாணியாரே! ஒரு பெண் ஒரு படி கோதுமையை அரைக்க அரை மணி நேரமாகிறது என்றால், அதே அளவு கோதுமையை இரண்டு பெண்கள் சேர்ந்து அரைத்தால் எவ்வளவு நேரம் பிடிக்கும்?

வாய்பேசாமல் அரைத்தால் அரை மணி நேரம்தான் ஆகும். வாயைத் திறந்தாலோ பல ஆண்டுகள் பிடிக்கும் அரைத்து முடிக்க!

கே. சி. மூர்த்தி; குறிஞ்சிப்பாடி.

(?) நான் இன்று ஒரு கனவு கண்டேன். அதில், நாம் திராவிடம் பெற்றுவிட்டோம் என்கிற நினைப்பில் தி. மு. க. கொடி ஏற்றினேன். அப்போது திடீரென்று என்னைப் போலீசார் சுட்டுவிடுகின்றனர். இந்தக் கனவு நனவாகுமா?

ஆகும்; தூங்கிக்கொண்டிருக்கும் ஆறு கோடி திராவிடர்களும் இதே கனவு கண்டால்!

கார்மேகம்; ராமனாதபுரம்.

(?) தோழர் அஜாய் கோஷ் வியாதிக்கு சிகிச்சை செய்து கொள்ள மாஸ்கோ போயிருக்கிறாராமே?

அவர் மட்டுமா? நோய்ப் படுக்கையில் வீழ்ந்து, எழுந்து நடமாட முடியாமல் தவிக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகூட சிகிச்சைக்காக அவரோடு மாஸ்கோ போயிருக்கிறது.

பா. கிருஷ்ணமூர்த்தி; பெரம்பூர்.

(?) வெளிச்சத்திற்கும், இருட்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

பகுத்தறிவு வாதிக்கும் பழமைப் பித்தர்களுக்கும் உள்ள வேறுபாடுதான்!

## பத்து நாள் பரபரப்பு....

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

*அவர்கள் மீதா இருக்கிறது? இல்லை! இல்லை! அதையும் நம்பிக்கொண்டு ஆயிரமாயிரமாக ஓடுகிறார்களே; அந்த புத்திசாலிகளின் மீதல்லவா தவறு இருக்கிறது!*

*ஜெண்ட்குன்வாரின் கணவன், புரையோடிப் போன புண் வியாதியால கஷ்டப்படுகிறவன். இதே வியாதி ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டு, அதன் காரணமாக ஒரு கால் வெட்டி எடுக்கப்பட்டு விட்டது! இப்போது வந்துள்ள வியாதி "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்"! இன்னொரு காலையும் எடுக்க நேரிடலாம. இந்த நிலையிலேதான் ஜூலை 29-ம் தேதி கணவன் பாம்பு கடித்து சாவான்–என்று மனைவி 'ஆருடம்' கூறினாள். அவனோடு தானும் உடன்கட்டை ஏறுவேன என்று பரபரப்பு ஏற்படுத்தினாள். உடன்கட்டை ஏறுவாளா? மாட்டாளா?–இந்தக் கேள்வி கிளம்புவதற்கு முன்பு, "கணவன் பாம்பு கடித்து சாவானா?" என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்க வேண்டாமா; இரண்டு லட்சம் பேர் கூடினார்களே, அவர்களுக்கு?*

*உடன்கட்டை ஏறுதல் என்னும் 'சககமனம்' ஏறத்தாழ 130 ஆண்டுகட்கு முன்பு இந்திய உபகண்டத்திலே வழக்கத்திலிருந்த கொடுமையான முறை. மணாளன் இறந்தால், மாலையிட்ட மங்கைக்கு மனமிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவனோடு வைத்து எரிக்கப்படுவாள். இந்தக் கொடுமையை எதிர்த்து, ராஜாராம் மோகன் ராய், தாகூரின் பாட்டனாராகிய துவாரக நாத் தாகூர் ஆகியோர் பெருங் கிளர்ச்சி துவக்கினார்கள்.*

*1829-ம் ஆண்டு கவர்னர் ஜெனரலாயிருந்த வில்லியம் பெண்டிங் பிரபு சட்ட மூலம், "சககமன முறை"யை ஒழித்தார். அப்போதும் வங்காளத்து மக்களிடையே பெரும் பரபரப்பு எழுந்தது!—சககமனம் தேவையென்றோரின் எதிர்ப்பை சமாளித்து, ராஜாராம் போன்றோரின் உதவியோடு சட்டம் நிறைவேறியது.*

*இப்போதோ ஜெண்ட் குன்வார், அந்த "சககமன"த்தின் பெயரால் ராஜாராம் மோகன் ராய் அப்போது ஏற்படுத்திய பரபரப்பை இப்போது ஏற்படுத்திக் காட்டி விட்டாள். ஆனால், அந்தப் பரபரப்பின் விளைவு, பயனுள்ளது; அழியாதது! — ராஜாராம் மோகன் ராய்க்கு வங்கத்து வரலாற்றிலே ஒரு நல்ல பக்கத்தை தரத் தகுதி வாய்ந்தது!*

*இந்த அம்மை ஏற்படுத்திய பரபரப்பு பத்து நாள் பத்திரிகைச் செய்தியோடு முடியக் கூடியது—விளைவு சாதாரணமாகவோ, அல்லது வேதனை தரக் கூடியதாகவோ இருந்தாலுங்கூட, எப்படியோ பரபரப்பை விதைத்து, விளம்பரமாகும் முறையைத் தெரிந்து வைத்திருப்பவர்களின் பட்டியலிலே ஜெண்ட் குன்வாரின் பெயரும் சேர்ந்துவிட்டது.*

*இதைத்தான் கேள்விகேட்ட நண்பருக்கு பதிலாகத் தர விரும்புகிறேன்.*

*இது போன்ற பரபரப்புக்களை பக்தி சிரத்தையோடு நம்பி ஏமாந்து விடுகிறவர்கள் எழுச்சி பெறத்தான் சுயமரியாதை இயக்கம் பணியாற்றி வருகிறது. பழைய நாள், 'குடி அரசு' 'பகுத்தறிவு' முதலிய ஏடுகளில் சாமி சிதம்பரனார் எழுதிய பாடல்தான் இதுபோன்ற சமயங்களில் நினைவுக்கு வர வேண்டும்:*

*"அவர் சொன்னார் இவர்*
*சொன்னார் என்று நம்பி*
*அறிவிழந்து தடுமாற்றம்*
*அடைய வேண்டாம்*
*எவர் சொன்ன சொல்*
*லேனும்; அதனையுந்தன்*
*இயல்பான பகுத்தறிவால்*
*எண்ணிப் பார்ப்பாய்!"*

*இதுதான் நமது பெரியார் அவர்களின் பல நாளைய முழக்கமுமாகும்! பகுத்தறிவுச் சங்க நாதமுமாகும்!*

★

## காளப்பூர்

6—8—55 சனி மாலை 5 மணிக்கு, பெரிய ஊரணிக் கரையில், தோழர் பழ. செல்லப்பா அவர்கள் தலைமையில், தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், மதுரை முத்து, பழ. இளங்கலைஞன்—ஆகியோர் பேசுவர்.

## சென்னை

7—8—55 ஞாயிறுமாலை 5-30 மணிக்கு, திருவல்லிக்கேணி கடற்கரையில், திருவல்லிக்கேணி, கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் இரண்டாம் ஆண்டு விழா பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா வழக்கறிஞர் கோகுலகிருட்டினன்–ஆகியோர் பேசுவர்.
இசை-இரா. சண்முகம்.

## துறையூர்

7—8—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, மாரியம்மன் கோயில் மைதானத்தில், பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும். மாலை 4 மணிக்கு நகரின் முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலம் நடைபெறும்.

## அரியாங்குப்பம் (புதுவை)

7—8—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, தி. மு. கழக துவக்கவிழா நடைபெறும். தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, வாணிதாசன்—ஆகியோர் பேசுவர்.

## கவுந்தப்பாடி

8—8—55 திங்கள் மாலை 5 மணிக்கு, பெரியார் மைதானத்தில் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும். பலர் பேசுவர்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.